# பெரம்பலூர் நகராட்சி

**2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30.12. 2022 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : நகர் மன்ற தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.12.2022 | **பொருள் 01 :** மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் அரியலூர் அவர்களின் கடித எண் ARY0326/RS/DEE/TNPCB/ ARY/ROA/2022 நாள் 07.12.2022 தேதிய கடிதத்தில் பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சர்வே எண் 221/3 மற்றும் 211/6 துறைமங்கலம் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மாதம் தோறும் கழிவு நீர் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க அக்டோபர் –2022 முதல் ஒரு ஆண்டுக்கு உள்ள பரிசோதனை கட்டணம் **ரூ.25000/–க்கு (ரூபாய். இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்)** தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் அரியலூர், அவர்களுக்கு செலுத்த அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1 மன்றம் அனுமதிக்கலாம்<br>2 மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .<br>3 பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 7544/2022 /இ1 | தீர்மான எண்.244 அனுமதிக் கப்பட்டது |
| 30.12.2022 | **பொருள்02 :** இந்நகராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்த நிதியாண்டுகளில் இருந்து இந்நகராட்சியில் பணிபுரிந்த பணியாளர்களின் சேமநலநிதி கணக்கிற்கு பிடித்தம் செய்யப்பட்டட தொகைக்கு வட்டி கணக்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் காணொளி காட்சி வாயிலாக கடந்த ஆகஸ்டு மாதம் 12–ம் தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, இந்நகராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்த 1992–1993–ம் நிதியாண்டில் இருந்து 2004–ம் ஆண்டு நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதன் பின்பு தொடர்ச்சியான காலம் முதல் தற்பொழுது 2021–2022–ம் நிதியாண்டு வரை பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த சேமநலநிதி தொகைக்கு வட்டி கணக்கிடும் பணியினை தனியார் நிறுவனத்தின் மூலம் பணி செய்திட அற்கான உத்தேச செலவினம் **ரூ.2,50,000/- ஆகும்.(ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** மேற்கன்ட செலவினத்தினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.**8382 /2022/பி2 | தீர்மான எண்.245 அனுமதிக் கப்பட்டது |
| 30.12.2022 | **பொருள் 03 :** இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடைகள், புதிய பேருந்து நிலைய கடைகள், தினசரி மார்க்கெட் கடைகள் மற்றும் மச்ச மாமிச கடைகளின் மாத வாடகையுடன் சேர்த்து சரக்கு மற்றும் சேவை வரி கட்டணம் (GST)18% தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கடைகளுக்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரை மாத வாடகைக்கான சரக்கு மற்றும் சேவை வரி கட்டணத் (GST)தொகையை உரிய காலத்தில் அரசு தலைப்பில் செலுத்துவதற்கும் இது தொடர்பாக நகராட்சி நிதி ஆலோசகர் (Audit consultant ) திரு.எஸ்.ராமநாதன் | தீர்மான எண்.246 அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>,திருச்சி அவர்களை தொடர்பு கொண்டு ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் GST போன்ற அரசு கணக்கு தலைப்புகளில் செலுத்தப்படுவதற்கு சலான்கள் காசோலை வாரியாக தனித்தனியே தயாரித்தற்கும் இதற்கான மாதந்தோரும் E Filing செய்யும் பணியும் செய்ய உத்தேச கட்டணம் ரூ 1,50,000/–ம் ஆண்டுக்கு திரு.எஸ்.ராமநாதன் , தணிக்கையாளர் திருச்சி அவர்களுக்கு செலுத்த வேண்டும். மேற்படி தணிக்கையாளர் கட்டண தொகை ரூ.1,50,000/–ம்.(ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2217/அ2 /2022</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.12.2022</td>
<td>பொருள் 04 : பெரம்பலூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு அத்தகைய நிலை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக திறந்த வெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தலற்ற நகராட்சியாக (OPEN DEFECATION +) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம், சிறுநீர் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. என்பதற்கும் மேலும் இது குறித்து பொதுமக்கன் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் கேட்பதற்கு ஏதுவாக இரண்டு தமிழ் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 40,000/- யை (ரூபாய்.நாற்பதாயிரம் மட்டும் ) நகராட்சியின் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ஆ) மன்ற கூட்டத்தை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 6534/எச்1/2020</td>
<td>தீர்மான எண்.247 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.12.2022</td>
<td>பொருள் 05: இந்நகராட்சியின் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்கு புகை மருந்து அடிக்கும் பணி மற்றும் கிருமி நாசினிகள் தெளிப்பதற்கும், டெங்கு கொசுப்புழுக்களை ஒழிக்க கோட்டம் எண்–II க்கு களப்பணியாளர்களை வழங்குவதற்கு 23.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூபாய்.)</th><th>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூபாய்)</th><th>ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1.</td><td>பெரம்பலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் கோட்டம் எண் -II, க்கு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு (DBC</td><td>989520</td><td>S. Jayanthi, Contractor, 497, Krishna nagar, Koneripalayam, Perambalur</td><td>9,86,160</td><td>மதிப்பீட்டை விட0 .34 % குறைவு</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.248 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | Workers) 21 களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் (out Sourcing) 80 நாட்களுக்கு தினக்கூலி அடிப்படையில் வழங்குதல் | | Tamilnadu Water Supplys & Drainage Systems, Rasipuram, Namakkal | **9,89,840** | **மதிப்பீட்டை விட0.17 % குறைவு** |

மேலே குறிப்பிட்டுள்ளபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக குறிப்பிட்டுள்ள திருமதி.S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் 0.34% குறைவாக குறிப்பிட்டுள்ளார். எனவே அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு மதிப்ட்டைவிட **0.34 %** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள S. Jayanthi, Contractor, Perambalur என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற கூட்டத்தை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின்மூலம் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு களப்பணியாளர்களை வழங்கிட உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தொகையை பொது நிதியிலிருந்து ஈடுசெய்யவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 5177/எச்1/2022**

---

**30.12.2022**

**பொருள் 06 :** இந்நகராட்சியில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்கு புகை மருந்து அடிக்கும் பணி மற்றும் கிருமி நாசினிகள் தெளிப்பதற்கும், டெங்கு கொசுப்புழுக்களை ஒழிக்க கோட்டம் எண்–I க்கு களப்பணியாளர்களை வழங்குவதற்கு 23.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம்

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூபாய்) | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | பெரம்பலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் கோட்டம் எண் -I, க்கு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு (DBC Workers) 21 களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் (out Sourcing) 80 நாட்களுக்கு தினக்கூலி அடிப்படையில் வழங்குதல் | **989520** | S. Jayanthi, Contractor, 497, Krishna nagar, Koneripalayam, Perambalur | **9,86,160** | **மதிப்பீட்டைவிட 0 .34 % குறைவு** |
| 2. | | | Tamilnadu Water Supplys & Drainage Systems, Rasipuram, Namakkal | **9,89,840** | **மதிப்பீட்டைவிட 0.17 % குறைவு** |

மேலே குறிப்பிட்டுள்ளபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக குறிப்பிட்டுள்ள திருமதி.S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் 0.34% குறைவாக குறிப்பிட்டுள்ளார். எனவே அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு மதிப்ட்டைவிட **0.34 %** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள S. Jayanthi, Contractor, Perambalur என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.249 அனுமதிக் கப்பட்டது

| | | |
|---|---|---|
| | ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற கூட்டத்தை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின்மூலம் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு களப்பணியாளர்களை வழங்கிட உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தொகையை பொது நிதியிலிருந்து ஈடுசெய்யவும் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 5177/எச்1/2022** | |
| **30.12.2022** | **பொருள் 07 :**இந்நகராட்சியில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலம் பெறுவதற்காக 23.11.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை தினமணி செய்திதாளில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணமாக **ரூ. 9412/–** க்கு **(ரூபாய்.ஒன்பதாயிரத்து நாநூற்று பனிரெண்டு மட்டும்)** வழங்கிட கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது மேற்படி செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 5177/எச்1/2022** | தீர்மான எண்.250 அனுமதிக் கப்பட்டது |
| **30.12.2022** | **பொருள் 08 :** பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.12.2022 தேதிய காணொளி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் மான்டிஸ் புயல் பாதிப்பு காரணமாக பெரம்பலூர் நகருக்கு "ஆரஞ்சு" நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் மழை வெள்ள தடுப்பு பணிக்கு தேவை பணியாளர்கள், தளவாடசாமான்கள் மற்றும் கிருமி நாசினி ஆகியவற்றினை போதுமான அளவு கையிருப்பு வைத்துக்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவே தளவாட சாமான்கள் போதுமான அளவு கையிருப்பு இல்லாத காரணத்தால் வாங்கி வழங்கிட கோரி துப்புரவு ஆய்வாளர்களால் 07.12.2022 அன்று குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட தளவாட சாமான்கள் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.1,50,000/. **(ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:-**<br>அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ஆ) மான்டிஸ் புயல் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மற்கொள்வதற்காக மன்ற கூட்டத்தைஎதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 8381/எச்1/2022** | தீர்மான எண்.251 அனுமதிக் கப்பட்டது |
| **30.12.2022** | **பொருள் 09 :** பெரம்பலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் - திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி செயல்பாடுகளின் அடிப்படையில் மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு (MOHUA) துறையினர் மூலம் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நட்சத்திர அங்கீகாரம் (STAR RATING) வழங்கி வருகின்றனர். அதன்படி பெரம்பலூர் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து சேகரிப்பது முதல் இறுதியாக்கம் செய்வது வரையிலான பணிகள் சிறப்பான முறையில் கையாளப்பட்டு, வருகிறது. மேலும் இரண்டாம் நிலை (SECONDARY STORAGE AND TRANSPORTATION) செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. | தீர்மான எண்.252 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | எனவே பெரம்பலூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (GARBAGE FREE CITY) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (THREE STAR RATING) பெற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (SELF DECLARATION) நகர்மன்றம் அனுமதித்துள்ளது எனவே பொதுமக்கள் இது குறித்து தங்களின் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்களை தெரிவிப்பதற்கு ஏதுவாக தமிழ் மற்றும் ஆங்கிலம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் **ரூ.40,000/. (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்)** வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:-**<br><br>அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ஆ) மன்ற கூட்டத்தை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 6534/எச்1/2020** | |
| **30.12.2022** | **பொருள் 10 :** இந்நகராட்சியின் பொது சுகாதார வாகனம் TN 46 E-8967 வாகனத்தின் முன்பக்கம் சக்கரத்தின் இடதுபுறம் (Front Wheal Left side) பட்டை உடைந்து பழுது ஏற்பட்டு வாகனம் இயக்க முடியாத நிலையில் இருந்ததை சரிசெய்வதற்கு உள்ளூர் நிறுவனத்தில் பொருட்கள் வாங்கப்பட்டு பொருத்தி நல்ல நிலையில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பொருட்கள் வாங்கியமைக்கும் அதனை வாகனத்தில் பொருத்தியமைக்கும் ஏற்பட்ட செலவினம் ரூ. 4558/. ( ரூபாய் நான்காயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்) துப்புரவு மேற்பார்வையாளர் திரு. ப. விநாயகம் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடிக்கப்பட்டுள்ளதால் அதற்கான செலவினம் **ரூ. 4558/– க்கு ( ரூபாய் நான்காயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்)** மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:-**<br><br>அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி வாகனம் பழுதுநீக்கம் பணி செய்து முடிக்கப்பட்டமைக்கும் அதற்கான செலவின தொகையினை வழங்க மன்ற கூட்டத்தை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 8967 /எச்1/2022** | தீர்மான எண்.253 அனுமதிக் கப்பட்டது |
| **30.12.2022** | **பொருள் 11 :** இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கும் மாவட்ட ஆட்சியர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அலுவலக உபயோகத்திற்கு தேவை நகல் எடுக்கவும் மேலும் 2021–2022 ம் ஆண்டுக்கான சொத்துவரி, காலியிட வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் இதர வரி இனங்களுக்கு கேட்பு பதிவேடுகள் எடுத்து தணிக்கைக்கு உட்படுத்தவும் நகர்மன்ற கூட்டத்திற்கான கூட்ட பொருள்கள் தயாரிக்கவும் பொறியியல் பிரிவில் திட்ட பணிகளான சாலை வசதி குடிநீர் வசதி மற்றும் பாதாள சாக்கடை வசதிகள் செய்ய கருத்துரு சமர்ப்பிக்க தேவையான வரைபடங்கள் நகல் எடுத்து சமர்ப்பிக்க 2022–2023ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் **ரூ.1.00 இலட்சத்திற்க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்.254 அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இந்நகராட்சியில் 01.04.2022 முதல் மேற்கொள்ளப்பட்ட ஒளி நகல்கள் மற்றும் வரைபடங்கள் நகல் பெற்றமைக்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மேற்படி செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.கஎண் 9495 / 2022 / இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.12.2022</td>
<td>பொருள் 12 : பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின்விளக்குகள் (டியூப் லைட்) 40 W பல்புகள் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும் ஏற்கனவே பழுது ஏற்பட்ட மின் விளக்குகளை சரிசெய்து பராமரிக்க இயலாத நிலையில் உள்ளது. தற்போது நகராட்சி மூலம் வாங்கி இருப்பு இல்லாததால் அலுவலகத்திற்கு தேவையான மின்விளக்குகள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்குவதற்கும் மேற்கண்ட பொருட்கள் வாங்குவதற்கு உரிய உத்தேச செலவினம் ரூ.25,000/– க்கு (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.கஎண் 9496 / 2022 / இ1</td>
<td>தீர்மான எண்.255 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.12.2022</td>
<td>பொருள் 13 : இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகள் பிரிண்டர்கள் கடந்த 5 வருடங்களுக்கு முன் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது . அனைத்து பிரிவுகளிலும் கீழ்கண்டவாறு பயன்படுத்தப்பட்டுவருகிறது
<table>
<tr><th>வ.எண்</th><th>அலுவலக பிரிவு விபரம்</th><th>கணினிகளின் எண்ணிக்கை</th><th>பிரிண்டர்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>பொதுபிரிவு</td><td>5</td><td>4</td></tr>
<tr><td>2.</td><td>வருவாய் பிரிவு</td><td>2</td><td>1</td></tr>
<tr><td>3.</td><td>நகரமைப்பு பிரிவு</td><td>1</td><td>1</td></tr>
<tr><td>4.</td><td>பொதுசுகாதாரப்பிரிவு</td><td>3</td><td>2</td></tr>
<tr><td>5.</td><td>பொறியியல் பிரிவு</td><td>5</td><td>4</td></tr>
<tr><td>6.</td><td>கணினி மையம் ( அலுவலகம்)</td><td>2</td><td>1</td></tr>
<tr><td>7.</td><td>கணினி மையம்<br>( பழைய அலுவலகம்)</td><td>1</td><td>1</td></tr>
<tr><td>8.</td><td>ஆணையாளர் அறை</td><td>1</td><td>0</td></tr>
<tr><td></td><td></td><td>20</td><td>14</td></tr>
</table>
மேற்கண்ட விவரப்படி இந்நகராட்சி அலுவலகத்தில் இயங்கிவரும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதனை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது.<br>எனவே, கணினிகள் மற்றும் பிரிண்டர்களை 2022–2023ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00/– இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.கஎண் 9497 / 2022 / இ1</td>
<td>தீர்மான எண்.256 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.12.2022 | **பொருள் 14 :** இந்நகராட்சியின் **பொது நிதி 2022- 2023** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட அவ்வையார் தெரு, வடக்கு மாதவி ரோடு, எளம்பலூர் ரோடு, துறைமங்கலம், துறையூர் ரோடு, ஆலாம்பாடி ரோடு, கல்யாண் நகர், திருநகர் , மேட்டுத்தெரு, மற்றும் பாரதிதாசன் தெரு போன்ற பகுதிகளில் ஆள் இறங்கும் பாதாள சாக்கடை தொட்டிகளில் (Man Hole) ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கும் , சாலைகளின் மட்டத்திற்கு தாழ்வாக உள்ளதால் வாகனங்கள் இரவு நேரங்களில் செல்வது மிகவும் சிரமமாக உள்ளதாக பொதுமக்கள் புகார் கூறுவதால் ஆள் இறங்கும் தொட்டிகளை உயர்த்தும் பணிக்கு **ரூ. 4.50/- இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 9498 /2022/ இ1 | தீர்மான எண்.**257** அனுமதிக் கப்பட்டது |
| 30.12.2022 | **பொருள் 15 :** இந்நகராட்சியின் **பொது நிதி 2022- 2023** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 வடக்கு மாதவி ரோட்டில் அமைந்துள்ள காவேரி மஹால் அருகில் கழிவு நீர் குழாயானது மிகவும் பழுதடைந்து சேதமடைந்த நிலையில் இருப்பதால் அவற்றை மாற்றியமைக்கவும் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகளில் உள்ள (Man Hole) பழுதுகளை சரி செய்யும் பணிக்கு மதிப்பீடு **ரூ. 1.10/- இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்)** மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 9499 /2022/ இ1 | தீர்மான எண்.**258** அனுமதிக் கப்பட்டது |
| 30.12.2022 | **பொருள் 16 :** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 ரோவர் ஆர்ச் சாலையில் , ஏற்கனவே பதிக்கப்பட்ட பாதாள சாக்கடை (Psc குழாய்) பைப்லைன்கள் பழுதடைந்து அடைப்பு ஏற்பட்டு காலை மற்றும் மாலை நேரங்களில் ஆள் இறங்கும் தொட்டிகளிலிருந்து சாக்கடை நீர் வெளியே செல்லும் நிலை ஏற்படுகிறது. எனவே இதனை அவசர அவசியம் கருதியும், பொதுசுகாதாரம் காக்க வேண்டியும் உடனடியாக பணியினை பொது நிதியின் கீழ் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை **ரூ. 4.40/- இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)** மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 9500 /2022/ இ1 | தீர்மான எண்.**259** அனுமதிக் கப்பட்டது |
| 30.12.2022 | **பொருள் 17 :** பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் ந.க.எண்.770/2022-பெ.மா எண்ணுடைய **18.11.2022**–ம் தேதிய செயல்முறைகள் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்37/2022 என எண்ணிடப்பட்ட ஆணையின் மூலம் பெரம்பலூர் நகராட்சி துறைமங்கலம் சர்வே எண் 146/2A1B,3A&147/2A–ல் 1.46 (5918.52ச.மீ) ஏக்கர் பரப்பளவில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை, பூங்கா, பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம் செய்வதற்குண்டான பகுதியினை திரு. பாலாஜி மற்றும் நரேந்திரன்,ஆகியோர் நகராட்சி ஆணையர் பெயருக்கு தான செட்டில் மெண்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவண நகலையும் இணைத்து | தீர்மான எண்.**260** அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனுப்பியுள்ளனர். மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி ,மழைநீர் வடிகால் அமைப்பு மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகளை மேற்கொள்ள உரிய கட்டணங்களை வசூல் செய்த பிறகு, மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.1000/– மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% நிலப்பயன் மாற்றக்கட்டணம், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு அமைத்தல் குடிநீர், பாதாளசாக்கடை சிறுபாலங்கள், பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் தொடர்பான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ஆகியவற்றை வசூல்செய்து கொண்டும் தான செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தினை பெரம்பலூர் நகராட்சி ஆணையர் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்தும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்37/2022–ன் மூலம் வழங்கப்பட்ட ஆணைகளின்படி பெரம்பலூர் நகராட்சி துறைமங்கலம் **சர்வே எண் 146/2A1B,3A&147/2A–ல் 1.46 (5918.52ச.மீ)** ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி<br>பெற்று உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.7915/2022/எப்1 | |
| 30.12.2022 | **பொருள்18:**பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் ந.க.எண்.717/2022-பெ.மா எண்ணுடைய **16.11.2022–**ம் தேதிய செயல்முறைகள் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்35/2022 என எண்ணிடப்பட்ட ஆணையின் மூலம் பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் தெற்கு சர்வே எண் 213/1B,1C1A1,30A,31A,&214/A2–ல் 1.99(8064.00ச.மீ) ஏக்கர் பரப்பளவில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை, பூங்கா, பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம் செய்வதற்குண்டான பகுதியினை திருமதி. சோலையம்மாள் நகராட்சி ஆணையர் பெயருக்கு தான செட்டில் மென்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட தான செட்டில்மென்ட் ஆவண நகலையும் இணைத்து அனுப்பியுள்ளனர். மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி ,மழைநீர் வடிகால் அமைப்பு மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகளை மேற்கொள்ள உரிய கட்டணங்களை வசூல் செய்த பிறகு, மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.1000/– மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% நிலப்பயன் மாற்றக்கட்டணம், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு அமைத்தல் குடிநீர், பாதாளசாக்கடை சிறுபாலங்கள், பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் தொடர்பான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ஆகியவற்றை வசூல்செய்து கொண்டும் தான செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தினை பெரம்பலூர் நகராட்சி ஆணையர் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்தும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்35/2022–ன் மூலம் வழங்கப்பட்ட ஆணைகளின்படி பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் தெற்கு சர்வே எண் **213/1B,1C1A1,30A,31A,&214/A2–ல் 1.99 (8064.00ச.மீ)** ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு | தீர்மான எண்.261 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி<br>பெற்று உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.7934/2022/எப்1</u>** | |
| **30.12.2022** | **பொருள் 19 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட துறைமங்கலம் நெடுவாசல் சாலையில் உள்ள (STP) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அனைத்து பகுதிகளிலிருந்தும் பாதாள சாக்கடை திட்டத்தின் வழியாக பெறப்படும் கழிவு நீரானது தினசரி சராசரியாக 3.60 MLD கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு 3.20 MLD ஆக வெளியேற்றப்படுகிறது. இந்நிலையத்தின் உள்ளே பெறப்படுகின்ற கழிவு நீர் அளவு மற்றும் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும் நீரின் **அளவினை** Flow Meter(450mm dia & 350 mm dia ) பொருத்தி கண்டறிவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட கழிவு நீர் நுழைவு வாயில் பகுதிகளிலும் சுத்திகரிக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படும் பகுதிகளிலும் ( Chamber) தொட்டிகள் இரண்டு எண்ணிக்கையில் கட்டுவதற்கு பழுதடைந்த 450mm dia MS pipe யினை மாற்றி புதிய குழாய் பதிப்பதற்கும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுவதற்கும் உத்தேச செலவினம் ரூ. **12.00 இலட்சத்திற்கு (ரூபாய்.பனிரெண்டு இலட்சம் மட்டும்)** மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.9501 /2022/ இ1 | தீர்மான எண்.262 அனுமதிக் கப்பட்டது |
| **30.12.2022** | **பொருள் 20 :**பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண 01 முதல் 21 வரை அனைத்து வார்டுகளிலும் 2004 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் வாயிலாக ( CWSS) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தினசரி சராசரியாக 320 MLD கொள்ளிடம் கூட்டு குடிநீர் பெறப்பட்டு , மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளி கிணறுகள் ஆழ்துளை கிணறுகள் மற்றும் கைபம்புகள் வாயிலாகவும் , தண்ணீர் விநியோகிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட கூட்டுக்குடிநீர் திட்டம் அமைக்கப்பட்டு சுமார் 35 வருடங்களுக்கு மேலான நிலையில் இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட 71 கிலோ மீட்டர் நீளத்திற்கான பிரதான குழாய்கள் 122 கிலோ மீட்டர் நீளத்திலான பகிர்மான குழாய்கள் மற்றும் வால்வுகளில் அவ்வபோது ஆங்காங்கே பழுதடைந்து அடைப்புகள் மற்றும் உடைப்புகள் ஏற்படுவதினால் குடிநீர் சீரான நிலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. ஒரு சில இடங்களில் மரங்களின் வேர்களினாலும் , குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் அடைப்புகள் ஏற்படுவதினாலும் , குழாய்கள்சேதமடைந்து குடிநீர் சீராக செல்ல இயலாத நிலை உருவாகிறது.<br>தற்போது அனைத்து வார்டுகளிலும் விரிவுப்படுத்தப்பட்ட பகுதிகள் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப அதிகமாகி வருவதால் அப்பகுதிகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டியது அத்தியாவசிய பணியாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் 90mm dia, 65 mm dia போன்ற சிறிய விட்டமுள்ள அளவுகளில் இருப்பதால் வளர்ந்து வரும் மக்கள் தொகைகேற்ப விரிவாக்கப்படுத்தப்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் | தீர்மான எண்.263 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நிலையில் தினசரி சீரான நிலையில் விநியோகிக்க இயலாமல் குடிநீர் விநியோகத்தில் கால தாமதம் ஏற்படுகிறது. எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு இந்நகரின் அனைத்து பகுதிகளிலும் சீராக குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக , ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சிறிய அளவிலான பிரதான மற்றும் பகிர்மான குழாய்களை மாற்றி புதியதாக பதிப்பதற்கும் அனைத்து பகுதிளிலும் விநியோக குழாய் மற்றும் பகிர்மான குழாய்கள் பதிப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மதிப்பீடுகள் தயார் செய்து கொடுக்க தெரிவித்து மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 9502/2022/ இ1 | |
| **30.12.2022** | **பொருள் 21:** நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை – 28 அவர்களின் கடித எண் 22083/2022/ SBM2 நாள் 13.12.2022 தேதிய கடிதத்தில் Solid Waste Management (SWM) விதிகள் 2016 இன் படி , முறைசாரா அல்லது அங்கீகரிக்கப்பட்ட கழிவுபொருள் எடுப்பவர்கள் மற்றும் கழிவு சேகரிப்பாளர்கள் மறு சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மற்றும் காகிதம் , பிளாஸ்டிக், உலோகம் , கண்ணாடி மற்றும் ஜவுளி போன்ற பொருட்களை பிரித்தெடுக்கும் வகையில் மறு சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை வரிசைபடுத்துவதற்கு போதுமான இடவசதியுடன்கூடிய மீட்பு வசதிகள் ( MRF) அல்லது இரண்டாம் நிலை சேமிப்பு வசதிகள் அமைப்பதற்கு இந்நகராட்சிக்கு **ரூ. 43.00 இலட்சம் ( central Share Rs. 0.21, State share Rs. 0.14 )** நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி வரப்பெற்ற கடிதத்தின் படி நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மத்திய நிதி 50 சதவிதமும் , மாநில நிதி 30 சதவிதமும் போக மீதமுள்ள 20 சதவிதம் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 8670/2022/ இ1 | தீர்மான எண்.264 அனுமதிக் கப்பட்டது |
| **30.12.2022** | **பொருள் 22:** இந்நகராட்சியில் 2022–2023 ம் நிதியாண்டின் வரி இனங்களான சொத்துவரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம் , பாதாள சாக்கடை கட்டணம், வரியில்லா இனங்கள் மற்றும் தொழில்வரி ஆகியவற்றில் 100 சதவீதம் வசூல் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் ஆகியோர்களின் அறிவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே வரி மற்றும் வரியில்லா இனங்களில் தற்போது வரை நடப்பு நிதி ஆண்டில் 38.09 சதவீதம் மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்களிடம் வரி செலுத்திட கோரி வார்டு எண் 1 முதல் 21 வரை ஆட்டோ மூலம் வரி செலுத்துவது தொடர்பான விளம்பரம் செய்திட உத்தேச செலவினம் **ரூ.1,50,000/– கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** ஆகும். மேற்படி செலவினத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 7030 /2022/அ1 | தீர்மான எண்.265 அனுமதிக் கப்பட்டது |

**30.12.2022**

**பொருள் 23:** மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் அரியலூர் அவர்களின் கடித எண் மாசு சூ பொ/தநாமா கவா / சிசி/ கோ. எண் 0213 அரியலூர்/2022 நாள் 07.12.2022 தேதிய கடிதத்தில் பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சர்வே எண் 27/1ஏ எளம்பலூர் கிராம எல்லையில் உள்ள ஆடு வதை கூடம் 31.03.2022 தேதியுடன் காலாவதி ஆகிவிட்டதால் 01.04.2022 முதல் 31.03.2023ம் ஆண்டிற்கு ஆடு வதை கூடத்தினை புதுப்பிக்க புதுப்பித்தல் கட்டணம் **ரூ.10,000/—க்கு (ரூபாய். பத்தாயிரம் மட்டும்)** தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் அரியலூர், அவர்களுக்கு செலுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண். 8524 /2022/அ1

தீர்மான எண்.266 அனுமதிக் கப்பட்டது

**30.12.2022**

**பொருள் 24:** பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 07.12.2022 தேதிய காணொளிகாட்சி ஆய்வுக்கூட்டத்தில் "மான்டிஸ்'' புயல் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு தேவையான பொதுசுகாதார தளவாட சாமான்கள் தேவையான அளவிற்கு கையிருப்பு வைத்திருக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்கள். அதனை தொடர்ந்து பெரம்பலூர் நகராட்சி துப்புரவு ஆய்வாளர்களின் 07.12.2022 தேதிய குறிப்பில் பொது சுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தேவையான தளவாட சாமான்கள் போதுமான அளவு இருப்பு இல்லாத காரணத்தினால் வாங்கி வழங்கிட கோரி தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க பொது சுகாதார தளவாட சாமான்கள் சப்ளை செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகளை 09.12.2022 அன்று சமர்ப்பிக்க இவ்வலுவலக விலைப்புள்ளி அறிவிக்கை ந.க.எண். 8381/2022/எச்1, நாள். 07.12.2022- ன் படி விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பொருட்களை சப்ளை செய்வதற்கு இரண்டு ஒப்பந்ததாரர்கள் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள் எனவே பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | நிறுவனம் / ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலைப்புள்ளி விபரம் | |
|---|---|---|---|---|
| | | | S. ஜெயந்தி, ஒப்பந்ததாரர், பெரம்பலூர் (ரூபாய்) | K. காமராஜ் ஒப்பந்ததாரர், பெரம்பலூர் (ரூபாய்) |
| 1 | கடப்பாறை | 1 எண்ணிக்கை | 850 | 870 |
| 2 | மண்வெட்டி | 1 எண்ணிக்கை | 480 | 490 |
| 3 | தட்டு (Plastic) | 1 எண்ணிக்கை | 220 | 225 |
| 4 | முள்கொக்கி | 1 எண்ணிக்கை | 405 | 415 |
| 5 | பிக்காஸ் | 1 எண்ணிக்கை | 527 | 529 |
| 6 | சம்பட்டி (பெரியது) | 1 எண்ணிக்கை | 1615 | 1700 |
| 7 | கரண்டி | 1 எண்ணிக்கை | 593 | 600 |
| 8 | கொடுவால் (கத்தி) | 1 எண்ணிக்கை | 440 | 460 |

தீர்மான எண்.267 அனுமதிக் கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | மூங்கில் கூடை | 1 எண்ணிக்கை | 430 | 435 |
| 10 | தென்னை விளக்கமார் | 1 எண்ணிக்கை | 40 | 46 |

மேற்கண்டுள்ளவாறு பொதுசுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தளவாட சாமான்கள் சப்ளை செய்ய வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் திருமதி எஸ். ஜெயந்தி ஒப்பந்ததாரர் என்பவர், வரிசை எண். 1 முதல் 10 முடிய உள்ள பொருட்கள் அனைத்திற்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:-**

அ) பொதுசுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தளவாட சாமான்கள் சப்ளை செய்ய வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் திருமதி எஸ். ஜெயந்தி ஒப்பந்ததாரர் என்பவர், வரிசை எண். 1 முதல் 10 முடிய உள்ள பொருட்கள் அனைத்திற்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தளவாட சாமான்கள் வாங்குவதற்கு உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் மூலம் பொருட்கள் சப்ளை செய்ய மன்ற கூட்டத்தை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 8381/எச்1/2022**

**30.12.2022**

**பொருள் 25:** பெரம்பலூர் நகராட்சி,பேரூராட்சியாக செயல்பட்டு வந்த நிலையில் கடந்த 02.07.2004 ஆம் ஆண்டு முதல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 277 ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தபட்டும் மீண்டும் அரசாணை எண் 136, நாள் 15.11.2006ன் படி இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதன்படி பெரம்பலூர் நகராட்சி செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி மூலம் உள்ள கட்டிடங்களுக்கு பொதுமக்களிடமிருந்து சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதில் இந்நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்டு வந்த நிலையில் சொத்துவரி சீராய்வு 01.10.2008 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு அப்பொழுது சொத்துவரி இனம் வாரியாகவும் தலைப்பு வாரியாகவும் கீழ்கண்டவாறு நகர்மன்ற தீர்மானம் எண். 126 நாள் 30.04.1997 ன்படி கீழ்கண்டவாறு அட்டவணையில் கண்டுள்ளபடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தீர்மான எண்.268 அனுமதிக் கப்பட்டது

| வ.எண். | தலைப்பு வாரியாக விபரம் | சதவீதம் |
|---|---|---|
| 1 | பொது | 3 |
| 2 | சுகாதாரப்பணி | 1.5 |
| 3 | தெருவிளக்கு | 2.5 |
| 4 | கல்வி நிதி | – |
| 5 | குடிநீர் மற்றும் வடிகால்நிதி | 3 |
| 6 | நூலகவரி | 1 |
| | **மொத்தம்** | **11** |

ஆனால், தற்பொழுதுவரை மேற்கண்டவாறு சொத்துவரி தலைப்பு வாரியாக பிரிக்கப்பட்டதில் பொது தலைப்பில் 10 சதவீதம் வசூல் செய்து கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. ஆனால், சொத்துவாரியாக வசூல் செய்யப்பட்ட நிலையில் அதில் கல்விநிதி, வசூல் செய்யப்பட வேண்டும். இதிலிருந்து நகராட்சியில் பராமரிக்கப்படும் கல்வி கட்டிடங்களுக்கு பராமரிப்பு பணி மட்டும் மேற்கொள்ளவும், இதர செலவினங்கள் இதில் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலையில் ஏற்கனவே உள்ள இனவாரியாக தலைப்பு வாரியாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில் கீழ்கண்டவாறு தலைப்புவாரியாக சொத்துவரி வசூல்சதவீதம் திருத்தம் செய்து அட்டவணையிடப்பட்டுள்ளது.

| வ.எண். | தலைப்பு வாரியாக விபரம் | ஏற்கனவே உள்ள சதவீதம் | தற்போது திருத்தம் செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|---|
| 1 | பொது | 7 | 4.5 |
| 2 | கல்வி நிதி | - | 2.5 |
| 3 | குடிநீர் மற்றும் வடிகால்நிதி | 3 | 3 |
| 4 | நூலகவரி | 1 | 1 |
| | **மொத்தம்** | **11** | **11** |

எனவே, மேற்கண்டவாறு சொத்துவரி இனம் வாரியாக தலைப்பு வாரியாக திருத்தம் செய்யப்பட்ட சதவீதத்தின் அடிப்படையில் இனிவரும் காலங்களில் செயல்படுத்திட வேண்டி மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2523/2022/அ1)

**//ஒம்//திருமதி.மா.அம்பிகா**
**நகர்மன்றதலைவர்**
**பெரம்பலூர் நகராட்சி**

// **உண்மை நகல்//**

**ஆணையாளர் (பொ)**
**பெரம்பலூர் நகராட்சி**